முதன்மை சார்பு நீதிமன்றம், பழனி

M.A.C.O.P. No. 301/2023

2025–ம் வருடம் நவம்பர் மாதம் 10–ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

பெயர்: திரு. பன்னீர்செல்வம் (எ.ம.சா.3) தொழில்:

த/பெ: இனம்:

கிராமம்: வயது:

மாவட்டம்: நாள்: 10–11–2025

முதல் விசாரணை:

சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டார்.

நான் இந்த மனுவின் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மதுரை Regional Officeல் முதுநிலை உதவியாளராக பணியாற்றுகிறேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

| வ. எண். | தேதி | ஆவணம் | ஆவணத் தன்மை | குறியீட்டு எண் |
|---|---|---|---|---|
| 1 | --- | TN 57 AZ 9570க்கான காப்பீடு | உண்மை நகல் | எ.ம.சா.ஆ.1 |
| 2 | 26.08.2025 | அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது (2) | அசல் | எ.ம.சா.ஆ.2 |
| 3 | --- | திருப்பப்பட்ட அஞ்சல் உறை (2) | அசல் | எ.ம.சா.ஆ.3 |

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

TN 57 AZ 9570 என்ற வாகனத்திற்கு விபத்தில் சமயத்தில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு நிலுவையில் இருந்தது என்றால் சரிதான். அந்த காப்பீட்டில் 3ம் நபருக்கான தொகை வசூலிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் நிபந்தனைக்குட்பட்டது. இந்த விபத்தை பொறுத்தவரை மனுதாரர் 3ம் நபர் என்றால் சரிதான். 3ம் நபரை பொறுத்தவரையில் 1ம் எதிர்மனுதாரருடன் போடப்பட்ட ஒப்பந்தம் அவரை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல, பாலிசி விதிமீறலை பொறுத்தவரை அவரை

கட்டுப்படுத்தும். 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இவ்விபத்தை பொறுத்தவரை 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தான் காரணம் என்றும், அந்த வா கனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதால் எங்கள் நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

K RENUGADEVI

Digitally signed by K RENUGADEVI
Date: 2025.11.10 13:12:05 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
பழனி.